மின்னிதழ் ஈழநாடு E-paper
Eelanadu
14.07.2020 செவ்வாய்க்கிழமை

# தேர்தல் நடத்துவது தொடர்பில் நிலைமையை பொறுத்து முடிவு

கொழும்பு, ஜூலை 14
"இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்தால் ஓகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பதை அப்போதைய நிலைமையைப் பொறுத்தே முடிவு எடுக்கப்படும்."
- இவ்வாறு தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

02

## கிளிநொச்சி மக்களே அவதானம்!

சுகாதாரத் திணைக்களம் வலியுறுத்து

கிளிநொச்சி, ஜூலை 14
கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத் தில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி யிலுள்ள யாழ். பல்கலைக்கழக தொழில் நுட்பபீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் தொற்று

02

### யாழ். பல்கலைக்கழகத்தின்

# கிளிநொச்சி வளாகம் உடனடியாகப் பூட்டு!

## அங்கு பயிலும் தெற்கு மாணவியின் சகோதரனுக்கு கொரோனா தொற்று

கிளிநொச்சி, ஜூலை 14
யாழ்.பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தின் அடிப்படையில், பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தின் அனைத்துப் பகுதிகளும் சுகாதாரத் திணைக்களத்தினால் முடக்கப் பட்டுள்ளன.

02




## தேர்தலை பிற்போட கோருகின்றார் சஜித்



கொழும்பு, ஜூலை 14
அரசு உடனடியாகத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அத்துருகிரிய பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கொரோனா இரண்டாவது அலை தொடர்பில் அனைத்து தகவல்களையும் வெளியிடுவது அரசு மட்டுமே எனவும் இந்தத் தகவல்களின் உண்மைத்

02

## கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துடன் தொடர்புடைய 492 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 14
காந்தக்காடு போதைப்பொருள் பாவனையாளர் களுக்கு புனர்வாழ்வு வழங்கும் நிலையத்துடன் தொடர்புடைய 492 பேருக்கு கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
நேற்று கொரோனாவைக் கட்டுப் படுத்தும் செயலணியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.
"கந்தகாடு புனர்வாழ்வு நிலையத் தில் 429 கைதிகள், அங்கு பணியாற் றும் 47 ஊழியர்கள் மற்றும் கைதிகளுடன் தொடர்புடைய 16 நபர்கள்

02



## ராஜாங்கனை தபால் வாக்களிப்பு 14 நாள்களின் பின்

வவுனியா, ஜூலை 14
கொரோனா தாக்கம் காரணமாக இடைநிறுத் தப்பட்ட ராஜாங்கனைப் பிரதேசத்தின் தபால் மூல வாக்குப் பதிவு 14 நாட்களின் பின் நடைபெறும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் தேர்தல் அதிகாரிகள் மற்றும் வன்னிப்

02

## மாலைதீவில் சிக்கியிருந்த 178 பேர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஜூலை 14
தொழில்வாய்ப்புக்காக மாலைதீவு சென்று அங்கு சிக்கியிருந்த இலங்கையர்கள் 178 பேர் நேற்று பிற் பகல் மத்தள விமான நிலையத்தை வந்தடைந் துள்ளனர்.
அவர்கள், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான விசேட விமானத்தில் இவ்வாறு வருகை தந்துள்ளனர்.
மாலைதீவி லுள்ள சுற்றுலா ஹோட்டல்களில்

02

## ராஜங்கனையில் சில பிரதேசங்கள் முற்றாக முடக்கம்

கொழும்பு, ஜூலை 14
கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதால், ராஜங்கனையில் சில பிர தேசங்கள் முற்றாக முடக்கி வைக்கப்பட் டுள்ளதாக சுகாதார சேவைகள்

02

## பெரமுனவுக்கு 150 ஆசனங்கள்



கொழும்பு, ஜூலை 14
எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 150 ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

02

## பஸ்களில் பொருள்கள் விற்கத் தடை

கொழும்பு, ஜூலை 14
கொரோனா அலை அரஸ் தொற்று நோயைத் தொடர்ந்து, அனைத்து தனியார் மற்றும் இ.போ.ச. பஸ்களில் இடம்பெறும் பல்வேறு வகையான விற்பனை நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்து

02

## கொரோனா நிலவரம் அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,646 | 29 | 654 | 112 | 1,981 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த இருவருக்குக் கொரோனாத் தொற்று

கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் கட்டாயத் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த இரண்டு இராணுவத்தினருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என அக்குரெஸ்ஸ பொது சுகாதாரப் பரிசோதகர் ஜீ.ஏ.பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அக்குரெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து நடத்திய விசாரணைகளில் உறுதிப்படுத்திய விடயங்களுக்கு அமைய அக்குரெஸ்ஸ, நாவல, ஹேனேகம, பலபாதா பிரசேதங்களிலுள்ள குறித்த இராணுவத்தினரின் குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பியகம தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர குறித்த கொரோனாத் தொற்றாளர்களிடம் பழகிய வர்த்தக நிலைய உறுப்பினர்கள், தனியார் வகுப்புகள் மற்றும் விவசாயக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட 50 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அக்குரெஸ்ஸ பிரதேசத்தில் வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்த சிலருக்கு எதிராகத் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறியுள்ளார்.

# ராஜபக்ஷ அரசே பொறுப்பு

நாட்டில் மீண்டும் அதிகரித்திருக்கும் கொரோனா வைரஸ் பரவல் நிலைக்கு ராஜபக்ச அரசே பொறுப்புக்கூற வேண்டும். ஆரம்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் எண்ணிக்கையில் பரிசோதனைகளை முன்னெடுப்பது அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியபோது, அதனை ஆளுந்தரப்பினர் கேலிக்குட்படுத்தினார்கள். ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. எனவே, கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்ததும் அரசு தமது பொதுத்தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நிறுத்தத் தேவையில்லை. மாறாக இதனைக் கட்டுப்படுத்த முடியாத தமது தோல்வியை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலகவேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## மாலைதீவில்...

அவர்கள் பணியாற்றியுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இவ்விமானப் பயணிகள் அனைவரும், மத்தல விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சி....

ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப் படுத்தப்பட்டிருப்பதால் கிளிநொச்சி வாழ் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

"கம்பஹாவைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரின் சகோதரருக்குத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், அவருடைய சகோதரி கடந்த 8 ஆம் திகதி கம்பஹாவில் இருந்து ரயில் மூலம் மதவாச்சி வரையிலும், மதவாச்சியில் இருந்து கிளிநெச்சி வரையும் பஸ்ஸிலும் பயணம் செய்திருப்பதனால், பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்த பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

அதே நேரத்தில் கொரோனாப் பெருந்தொற்று அபாயம் மீண்டும் தோன்றியிருப்பதனால் அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளுதல், அவசியமின்றிப் பொது இடங்களில் கூடாதிருத்தல், அவசியமற்ற பொது நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை தவிர்த்துக்கொள்ளல் போன்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதோடு, தற்போது நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதனால் மூக்கு, வாய் என்பவற்றை மூடிக்கொள்ளும் வகையில் பொது இடங்களில் அனைவரும் முகக்கவசம் கட்டாயம் அணிந்து கொள்ளவேண்டும்" என்றும் அறிவுறுத்தியிருக்கின்றனர்.

## பஸ்களில்...

சபைக்கு, போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர குறித்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

சில நடமாடும் விற்பனையாளர்கள், சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் செயற்படுகின்றனர் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சிடம், பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் முதல் ரயில்களில் நடமாடும் விற்பனையாளர்கள் நுழைவதற்கு இலங்கை ரயில் திணைக்களம் தடை விதித்திருந்தது.

இவ்வாறான விற்பனையாளர்களினால் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதால், இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## கந்தக்காடு...

என 492 பேருக்கு கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட் டுள்ளனர் என்று கண்டறியப் பட்டுள்ளது.

இரத்தினபுரியைச் சேர்ந்த ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் கந்தக்காடு மையத்தின் பணியாளராவார்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் விவரம் முதலில் சுகாதார அமைச்சிடம் பதிவு செய்யப்படுகின்றன. பின்னர் அப்பகுதியின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோருக்கும் தேவையான நடவடிக்கைகளுக்கு அறிவிக்கப்படுகின்றது" என்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

## பெரமுனவுக்கு...

பியகமவில் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசார நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவர பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் தேவை என்றும் குறிப்பிட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்தது என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதன்போது குறிப்பிட்டார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 97 இடங்களைப் பெற்றுக்கொண்டது என்றும் தற்போது 150 இடங்களைப் பெற்றுக்கொள்ள கம்பஹா மக்கள் பொதுத் தேர்தலில் மேலும் ஐந்து உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## தேர்தலை...

தன்மை தொடர்பில் பெரும் சிக்கல் இருப்பதாவும் அவர் கூறியுள்ளார்.

தனது தலைமையிலான குழுவினர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று இது தேர்தல் நடத்துவதற்கு உகந்த காலம் இல்லை என தெரிவித்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ரஜாங்கனை..

பிராந்திய பொலிஸ் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட ராஜாங்கனைப் பிரதேசத்தின் தபால் மூல வாக்குப் பதிவுகள் 14 நாட்களின் பின் இடம்பெறும். அந்தப் பகுதியில் கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின் அங்கு வாக்குப் பதிவு இடம்பெறும்-என்றார்.

## ராஜாங்கனையில்...

பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ஆலோசகர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட நிலையில் ராஜங்கனையில் மேலும் சிலருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே இந்த குறிப்பிட்ட பிரதேசங்களில் மக்கள் நடமாட்டத்துக்கு முற்றாகத் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் கோரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் மேலும் 14 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தேர்தல்...

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டவாறு இன்று ஆரம்பமாகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் இராஜாங்கனைப் பிரதேச செயலகப் பகுதியில் மட்டும் தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து அதிகரிக்குமா? இல்லையா? அல்லது ஓகஸ்ட் 5ஆம் திகதி திட்டமிட்டவாறு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை என்னால் இப்போது உறுதிபடக் கூற முடியாது. ஏனெனில், நான் சோதிடம் பார்க்கும் நபர் அல்லன்.

தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பொறுத்தவரை திட்டமிட்ட திகதிகளில் அதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

வாக்காளர்களினதும் எங்களினதும் பாதுகாப்புக் கருதி சுகாதார வழிகாட்டல்களுக்கு அதி முக்கியத்துவம் வழங்கி எமது பணிகளை முன்னெடுக்கின்றோம்-என்றார்.

## கிளிநொச்சி வளாகம்....

வளாகத்தினுள் இருந்து வெளியேறுவதற்கும், வளாகத்தினுள் செல்வதற்கும் நேற்று திங்கட்கிழமை (ஜூலை 13) மாலை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொற்றுச் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்றுக்கொண்டிருந்த பரீட்சைகள் உள்பட அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடமை புரியும் கம்பஹாவைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரின் சகோதரன் ஆவார். அவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றி வரும் ஒரு இராணுவச் சிப்பாய்.

அவருக்கு கோரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, கம்பஹாவில் உள்ள சுகாதாரத் திணைக்களத்திலிருந்து கிளிநொச்சி பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு உத்தியோக பூர்வமாகத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்தத் தகவலின் அடிப்படையில், தொற்றுக்குள்ளான இராணுவச் சிப்பாயின் சகோதரி கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் நுட்ப பீடத்தில் கல்வி பயில்வதால், கிளிநொச்சி வளாகம் மூடப்பட்டுள்ளது.

சகோதரனுக்கு கோரோனா உள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள அவரது சகோதரி கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை கம்பஹாவில் இருந்து மதவாச்சி வரை ரயிலில் வந்திறங்கி, அங்கிருந்து பஸ்ஸில் கிளிநொச்சிக்கு வந்திறங்கியுள்ளார்.

அவர் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விடுதியில் தனி அறையில் தங்கியிருந்தபோதும் கூட்டு கற்கை (Groun Study), சிற்றுண்டிச் சாலையில் உணவருந்தல் மற்றும் பரீட்சை மண்டபத்தில் ஏனைய மாணவர்களுடன் பழகியிருப்பார் என்ற சந்தேகம் சுகாதாரத் துறையினருக்கு ஏற்பட்டுள்ளது.

மாணவியின் உயிரியல் மாதிரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதன் பெறுபேறுகள் இன்று மதியத்துக்குப் பின்னரே வெளியாகும். அதனால் விடுதியில் தங்கியுள்ள 330 மாணவர்களின் வசதி கருதி அனைத்து நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகம் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் உள்ள தொழிநுட்ப பீடம், பொறியியல் பீடம் மற்றும் விவசாய பீடங்களைச் சேர்ந்தவர் வளாகத்துக்குள் உள்நுழையவும் வெளியேறவும் சுகாதாரத்துறையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.07.2020 செவ்வாய்க்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## மீண்டும் வீடு தேடிவரும் ஆபத்து?

மீண்டும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. கட்சிகள் அவற்றின் பெரியளவிலான தேர்தல் பிரசாரக் கூட்டங்களை இடைநிறுத்தியிருக் கின்றன. தேர்தலை பிற்போடுமாறும் கோரிக்கைகள் முன்வைக் கப்படுகின்றன. ஒரு சில நாட்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென்று அதிகரித்திருப்பதைத் தொடர்ந்தே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கொரோனா தொற்று ஏற்பட்ட ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டால், இலங்கை ஒப்பீட்டடிப்படையில் மிகவும் முன்னேற்றகரமான நிலையில்தான் இருந்தது. இதனால் மக்கள் மத்தியில் கொரோனா தொடர்பில் பெரியளவில் அச்சம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், இதுதான் தற்போது பிரச்னைக்குரிய விடயமாகவும் மாறியிருக்கின்றது. அரசாங்கம் தேர்தலை எப்படியாவது நடத்தி முடித்துவிட வேண்டுமென்று எண்ணுகின்றது. மக்கள் எதுவித அச்சமுமின்றி இயல்பாக இருந்தால்தான் தேர்தலை சுமூகமாக நடத்த முடியும். இதனால்தான், ஆரம்பத்திலிருந்த கட்டுப்பாடுகளை அரசாங்கம் படிப்படியாக தளர்த்தியது. ஆனால், இன்றைய நிலைமை சிவப்பு எச்சரிக்கையை காண்பிக்கின்றது.

உண்மையில் தேர்தல் பிரசாரங்களின்போது சில சுகாதார நடைமுறைகள் பின்பற்றி, சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தபோதிலும் கூட, கட்சிகள் அவற்றை பெரியளவில் பின்பற்றவில்லை. அதே போன்று பொதுவாழ்வில் சில சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருந்தாலும் கூட, அவற்றை மக்கள் பொதுவெளியில் பெரியளவில் பின்பற்றவில்லை. சாதாரணமான சூழலில் நடந்துகொள்வது போன்றே மக்கள் நடமாடினர். அனைவரும் முகக்கவசத்தை அணிந்து கொண்டனர். ஆனால், ஏனைய நடைமுறைகள் எவற்றையும் பின்பற்றவில்லை. தற்போது ஆடைகளின் நிறத்திற்கு ஏற்ப முகக்கவசம் அணியும் பெண்களை காணக்கூடியதாக இருக்கின்றது. தங்களை நிழலாகத் தொடரும் ஆபத்து தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இருப்பதாகவும் தெரியவில்லை. கடந்த ஒரு மாத காலமாக ஊடகங்களை ஆக்கிரமித்திருக்கும் தேர்தல் வீர வசனங்களால், கிட்டத்தட்ட கொரோனா மறக்கடிக்கப்பட்டது. ஆனால், தற்போது மீண்டும் கொரோனா தேர்தலை விழுங்கிவிடுவோ என்னும் அச்ச நிலைமை தோன்றியிருக்கின்றது.

அரசாங்கம் இல்லாமல் நாடு முன்னோக்கி நகர முடியாது. அந்த வகையில் தேர்தலை எப்படியாவது நடத்திவிட வேண்டுமென்று சிந்திப்பதிலும் தவறில்லை. ஆனால், நிலைமை கட்டுப்பாட்டை மீறினால், அதன் பின்னர் நாடு பெரும் நெருக்கடிக்குள் சிக்கிவிடலாம். அரசாங்கத்தின் சில தூரநோக்கற்ற நடவடிக்கைகளும் இதற்கு ஒரு காரணம். உதாரணமாக அரசாங்கம் சில விடயங்களை கட்டாயப்படுத்தியது. அதனை மீறுவோர் தனிமைப்படுத்தலை எதிர்கொள்ள நேரிடும் என்று அச்சுறுத்தியது. ஆனால் தேர்தல் காலம் என்பதால் விடயங்களை மென்மையாகவே அணுகியது. இதனை மக்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். மேற்கு நாடுகளில் கடைப்பிடிப்பது போன்று, விதிகளை மீறுவோருக்கு தண்டப்பணம் அறவிடும் முறைமையை அரசாங்கம் அறிவித்திருந்தால் மக்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்திருக்கலாம். முகக் கவசம் அணியாதவருக்கு 5,000 ரூபா அபராதம் என்று அறிவித்திருந்தால் அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பர். தேர்தல் பிரசாரத்தின் போது சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் அது தேர்தல் விதி மீறலாகக் கருதப்படும் என்று அறிவித்திருந்தால் அனைவரும் அதனை பின்பற்றியிருப்பர். ஆனால், அரசாங்கம் இப்படியான முறைமைகளை சிந்திக்கவில்லை. இதன் காரணமாகவே நிலைமை மோசமாகியிருக்கின்றது. இது தொடர்ந்தால் ஒருவேளை தேர்தலையும் ஒத்திப்போட வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம்.

# யாழ். மாவட்டத்துக்கு பேராபத்து இந்தியாவிலிருந்து வருபவர்களால்

## யாழ். மாவட்ட அரச அதிபர் மகேசன்



யாழ்ப்பாணம், ஜூலை14

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்திற்குள் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் நிலையில், இவ்வாறு நுழைபவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். என்று கூறியுள்ளார் யாழ். மாவட்ட செயலர் க.மகேசன்.

மக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்க தவறினால் அது யாழ். மாவட்டத்திற்கு பேராபத்தை உண்டாக்கும் சாத்தியம் உள்ளது. எனவே மக்கள் இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்கவேண்டியது கட்டாயம்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் சுகாதார துறையினர் மற்றும் பொது மக்களின் அயராத முயற்சியால் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையில் இப்போது இலங்கையில் 2 ஆம் அலை சமூக தொற்காக மாறும் அபாயம் எழுந்துள்ளது.

இந்நிலையில் யாழ். மாவட்டம் பாதுகாப்பாக இருப்பதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது அத்தியாவசிய மானது. மக்கள் சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாக பின்பற்றுவதுடன், அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டும் வெளியில் நடமாடுங்கள். சமூக இடைவெளியை இறுக்கமாகப் பேணுங்கள். மேலும் யாழ். மாவட்டத்திற்கு பேராபத்தை உண்டாக்க கூடிய சம்பவம் அண்மைக் காலத்தில் அதிகரித்திருக்கின்றது. அதாவது இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் குறிப்பாக யாழ். மாவட்டத்திற்குள் நுழையும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இறுதியாகக்கூட 4 பேர் கடற்படையின ரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

சட்டவிரோதமாக நுழைகிறவர்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்தால் உடன டியாக கிராமசேவகர் ஊடாக சுகாதார துறையினருக்கு அறியப்படுத்துங்கள். அதனை செய்யா விட்டால் யாழ்.மாவட்டம் பேராபத்தை சந்திப்பதற்கான ஆபத்துக்கள் உள்ளன - என்றார்.

## 124 கிலோ கஞ்சாவுடன் யாழில் இருவர் கைது!

வட்டுக்கோட்டை, ஜூலை14

வட்டுக்கோட்டையில் 124 கிலோவிற்கும் அதிக மான கேரளா கஞ்சாவுடன் இருவரைத் தாம் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரதொல வீதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 37 , 40



வயது நபர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# சமத்துவ ஆட்சி முறையையே தமிழர் நாங்கள் கேட்கிறோம்

## மட்டக்களப்பில் சம்பந்தன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 14

பல நாடுகளில் பின்பற்றப்படும் சமத்துவமான ஆட்சி முறைகளையே நாங்கள் கேட்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது நாட்டில் 70 வருடங்களாக தீர்க்கப்படாத பிரச்னை இருக்கின்றது. ஒரு அரசியல் தீர்வு சம்பந்தமான பிரச்னை என்பது மிக இலகுவான பிரச்னையல்ல, மிகவும் கடினமான பிரச்னையாகும்.

புதிய நாடாளுமன்றம் எவ்வாறு அமையப் போகின்றது என்பது எங்களுக்குத் தெரியாது. அதை எதிர்பார்த்து நாங்கள் எங்களை தயார்படுத்த வேண்டும். என்னைப் பொறுத்தவரை நாம் அநீதியாக எதையும் கேட்கவில்லை. எமது உரிமைகளையே நாம் கேட்கின்றோம்.

நாங்கள் ஒரு தனிப்பட்ட மதம், கலாசாரத்தைக் கொண்ட ஒரு இனம். விசேடமாக தமிழ் மக்கள் சொந்தக் கலாசாரம், எங்களுக்கென கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், மொழி, சமயம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு தேசிய இனமாவோம். அவ்விதமான இனத்துக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தன்னுடைய கருமங்களை தானே கண்காணித்துக் கொள்கின்ற தான் சரித்திர ரீதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற பிரதேசங்களில் பெரும்பான்மை இனமாக வாழ்ந்துவந்த வாழ்ந்துகொண்டிருக்கின்ற பிரதேசங்களில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையுண்டு.

அந்த அடிப்படையில்தான் பல நாடுகளில் சமத்துவத்தின் அடிப்படையில் சமாந்தரமாக வாழ்கின்றோர் மத்தியில் ஆட்சி முறையே பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. இதைத் தான் நாங்கள் கேட்கின்றோம். அதை எங்களுக்கு மறுக்கமுடியுமென நான் நினைக்கவில்லை. இன்று சர்வதேச ரீதியாக விசேடமாக இந்தியாவும் சர்வதேச சமூகமும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்ற கருத்தை மிகவும் உறுதியாக முன்வைத்து வருகின்றார்கள்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் எங்களது சம்மதம் இல்லாமல் நாங்கள் ஆட்சி செய்யப்படுகிறோம். 1956ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் ஆட்சிமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்று தமது ஜனநாயக முடிவுகள் மூலமாக தீர்ப்பளித்துள்ளனர். அது அமுல்படுத்தப்படவில்லை- என்றார்.





# தபால் வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது

கொழும்பு, ஜூலை 14

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் காலை 8.30 மணி தொடக்கம் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்று வருகின்றது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஊழியர்கள் முகக்கவசம் அணிந்து கை சுத்தம் செய்த பின்னரே வாக்களிப்பு நிலையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரை கட்டம் கட்டமாகத் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ள நிலையில் 14 ஆம்,15 ஆம் திகதிகளில் முப்படையினர் , பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரி கள் தவிர்ந்த ஏனைய அரச உத்தியோகத்தர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

16 ஆம், 17 ஆம் திகதிகளில் முப்படையினர், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள் ஆகியோர் வாக்களிப்பர்.

இந்த 5 நாட்களிலும் வாக்களிக்க முடியாத அரச உத்தியோகத்தர்கள், தமது அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்திலிருக்கும் தேர்தல் காரியாலயத்தில் எதிர்வரும் 20ஆம், 21 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஈஸ்டர் தாக்குதல்: பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஜூலை 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை, அக்கரைப்பற்றிலுள்ள அவரது வீட்டில் வைத்தே, கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலத்தில், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் அபுபக்கர் கடமையாற்றியுள்ளார்.

தற்போது அம்பாறை பொலிஸ் வாகனப் போக்குவரத்துப் பிரிவில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

இந்நிலையிலேயே குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரை நேற்றுக் கைது செய்துள்ளனர்.

# வாக்களிக்க ஊழியருக்கு விடுப்பு மறுப்பது குற்றம்

கொழும்பு, ஜூலை 14

பொதுத் தேர்தலில் வாக்களிக்க ஊழியருக்கு விடுப்பு வழங்காவிடின் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஊழியர் ஒருவரால் கோரப்படும் விடுப்பு வழங்காதது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஒகஸ்ட் 5ஆம் திகதி பொதுத் தேர்தலில் வாக்களிக்கப் போதியளவு நேரம் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு தேர்தல் தினமன்று வாக்களிக்க விடுப்பு வழங்கப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு திரட்டுகிறார் முரளி

கொழும்பு, ஜூலை 14

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன், பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு திரட்டும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

கொழும்பில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் களமிறங்கியுள்ள வேட்பாளர் விமல் வீரவன்ஸவின் தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு, தமிழ் வர்த்தர்களின் ஒன்றுகூடல் ஒன்றை, முத்தையா முரளிதரன் ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போது அந்த ஒன்றுகூடலில் விமல் வீரவன்ஸவிடம், வர்த்தகர்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கேள்வி எழுப்பினர்.

அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விமலின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர், உங்களின் பிரச்னைகள் தொடர்பாக அரசின் கவனத்துக்கு கொண்டுச் செல்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

# ஊரடங்கு இல்லாமலே அதனை கடைப்பிடிக்கும் நாட்டு மக்கள்

கொழும்பு, ஜூலை 14

நேற்று அதிகாலையிலிருந்து நாட்டில் பல பிரதேசங்களில் மக்கள் நடமாட்டம் பெருமளவில் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தின் முதல் நாளாக இருந்தாலும் கடந்த வாரங்களில் காணப்பட்ட மக்கள் நடமாட்டத்தை நேற்று காண முடியவில்லை.

அரசாங்கத்தினால் எதுவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படாத போதிலும் மக்கள் தமக்குத் தாமே கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு வெளிநடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பாடசாலைகளுக்கு அரசினால் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள அதேநேரம், நேற்று பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்திய மக்களின் எண்ணிக்கையும் பெருமளவில் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



செய்திகள்

# வடக்கு மக்களுக்கு புதிய நடைமுறைகள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா பரம்பல் சூழலில் வட மாகாணத்தில் உள்ள மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சில நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமையவே இந்த நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் அல்லது பிற்போடவும்.

அவசியமின்றி பொது இடங்களில் ஒன்றுகூடுவதை தவிர்க்கவும்.

அவசியமற்ற பொது நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளவும் அல்லது பிற்போடவும்.

தற்போது நாட்டில் "மாஸ்க்" அணிவது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. எனவே பொது இடங்களில் அனைவரும் "மாஸ்க்" கட்டாயம் அணிந்து கொள்ள வேண்டும். "மாஸ்க்" மூக்கு , வாய் என்பவற்றை மூடிக்கொள்ளுமாறு அணிவது அவசியம்.

"மாஸ்க்" அணியாதவர்கள் அனைவரும் இரண்டு வாரங்களுக்கு கட்டாய தனிமைப் படுத்தல் முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பொது இடங்களில் பொது மக்கள் ஒன்று கூடும்போது 2 பேருக்கு இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் சமூக இடைவெளி பேணப்படவேண் டும்

எந்த நிறுவனங்களுக்கும் உட்செல்ல முன்னர் சவர்க்கார மிட்டு கை கழுவ வேண்டும். அதே போன்று வெளியே சென்று வீட்டுக்குத் திரும்பியவுடனும் சவர்க்கார மிட்டு கை கழுவ வேண்டும்.



மேலும், தற்போது இந்தியாவில் கொரோனா தொற்று தீவிரமாக இருப்பதால் பலர் அங்கிருந்து இலங்கைக்கு சட்ட விரோதமாக வர முயற்சிக்கின்றனர். எனவே, கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக எவரேனும் வந்தால் உடனடியாக பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார மருத்துவ அதிகாரி, கிராம சேவையாளர் அல்லது பொலிஸாருக்கோ தகவல் அளிக்கும்படி மாகாண சுகாதார சேவைகள் பணிபாளர் கோரியுள்ளார்.



# தேர்தல்கள் ஆணையாளர் மன்னாருக்கு திடீர் வருகை

மன்னார், ஜூலை 14

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று திங்கட்கிழமை திடீர் பயணமாக மன்னாருக்கு வந்தார்.

இதன்போது, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்குச் சென்று மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஜே. ஜெனிற்றனுடன் கலந்துரையாடினார்.

இதனைத்தொடர்ந்து எதிர் வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான வாக்கு வீத அதிகரிப்பை ஊக்குவிக்கும் வகையில் இடம் பெற்ற வீதி நாடகத்தில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கலந்து கொண்டிருந்தார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக குறித்த வீதி நாடகம் இடம் பெற்றது.

இதன் போது தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உள்ளிட்ட குழுவினர் குறித்த விழிர்ப்புணர்வு வீதி நாடகத்தையும் பார்வையிட்டனர்.

# சுதந்திரமான நீதியான தேர்தலை நடத்தவே நாம் முயற்சிக்கிறோம்

## யாழ். வந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்



யாழ்ப்பாணம், ஜூலை 14

தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்த முயற்சிப்பதாக கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் பிரதிநிதி பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்க இன்று (நேற்று) நாங்கள் வடக்கிற்கு வந்தோம். சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தேர்தல் திணைக்களத்துடனும் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகவே யாழ்ப்பாணம் வந்தோம். இதுபோல, வவுனியாவுக்கும் செல்லவுள்ளோம்.

எமக்கு தற்போது உள்ள ஒரு பிரச்னை கொவிட் - 19 வைரஸ். இது நாடளாவிய ரீதியாகவுள்ள பிரச்னை. உலக சுகாதார ஸ்தாபனம் எப்போது கொவிட் - 19 இல்லை என அறிவிக்கின்றதோ, அன்று வரை இதன் தாக்கம் இருக்கும்.

இந்த நிலையில், எவ்வாறு தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் நாம் பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளோம். அதாவது தனிமைப் படுத்தல் சட்டம், சுகாதார நடைமுறைகள் போன்ற பல்வேறு விடயங்களை பின்பற்றி தேர்தலை நடத்த நாங்கள் முயற்சிக்கின்றோம்.

இதேபோல் தேர்தல் திணைக்களமும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அனைவரின் ஒத்துழைப் போடும் குறிப்பாக பொதுமக்களின் ஒத்துழைப்பு இந்த விடயத்தில் மிகவும் முக்கியமானது. அனைவரும் "மாஸ்க்" அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதேபோல் சுகாதாரத் திணைக்களத்தின் சுகாதார நடைமுறைகளை மக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் - என்றார்.



# கொரோனா போராளிகளின் நலனுக்காக 108 நாள் விரதம் அனுஷ்டித்த முதியவர்

வடமராட்சி, ஜூலை 14

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் நலன் வேண்டி முதியவர் ஒருவர் 108 நாட்கள் விரதம் அனுஷ்டித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கரவெட்டி பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா என்ற 81 வயது முதியவரே இத்தகைய நெகிழ்ச்சியான செயலைப் புரிந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு, கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் நலனுக்காக, கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி முதல் இந்த ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர், நேர்த்தி வைத்து,108 நாட்கள் விரதம் இருந்து தனது தலைமுடி மற்றும் தாடியை மழித்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொது மக்களிடையே பெரிதும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கொக்காவில் விபத்தில் ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 14

வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து கொக்காவில் பிரதேசத்தில் ஏ - 9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு மரக்கறிகளை ஏற்றி வந்த கெப் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த வர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



செய்திகள்

# பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தல்!

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 14

பொதுத் தேர்தலின் பின்னர் அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் பழைய முறையிலாவது மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதுக்கவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நிலத்துக்குள் நுழையும் போதே என்னால் மிகவும் மகிழ்ச்சியை உணர முடிகின்றது.

எங்கள் அரசு காணப்பட்ட காலப்பகுதியில் நான் பாடசாலை ஒன்றை திறக்க வந்தவுடன் இந்த நிலத்தைப் பார்க்க வந்தேன். இங்கு மிகப்பெரிய சதுப்பு நிலமே காணப்பட்டது.

நான் அந்த நேரத்திலேயே அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பேற்படுத்தி இந்த நிலத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூறினேன்.

அவர் அந்த வேலையைச் செய்தார். இதனால் இன்று நங்கள் இந்த முறையில் மிகவும் சுத்தமாக, தெளிவான அபிவிருத்தியடைந்த இடத்தில் கூட்டத்தை நடத்துவது குறித்து எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை உணர முடிந்தது.

அன்று நாங்கள் சிறிய கலந்துரையாடலில் ஆரம்பித்த பொதுஜன பெரமுனவின் வருகை இன்று மிகப்பெரிய சக்தியாகியுள்ளது. பிரதேச சபை தேர்தலில் நான்காயிரம் பிரதிநிதிகளை நியமிக்க முடிந்தது.

அன்று 71 சதவீத வாக்குகளை பெற்று தேர்தலில் வெற்றி பெற்றோம். வடக்கு - கிழக்கை தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் நாங்கள் மிகவும் தெளிவான விசேட வெற்றியை பெற்றோம் என்று கூறினால் சரியாக இருக்கும்.

கடந்த அரசு இரண்டு வருடங்களாக மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டது. மாகாண சபை தேர்தலை பிற்போட்டுவிட்டு முடிந்த விடயங்களைச் செய்தார்கள்.

நாட்டில் நல்ல நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்த நேரிட்டது. நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றியை பெற்றோம். இந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அரசமைப்பில் மாற்றம் மேற்கொண்டு பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக உரிமையைக் காப்பாற்ற நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

கடந்த 5 வருட ஆட்சியில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் முடிந்த விடயங்களை செய்தோம். எனினும் கடந்த அரசில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் இருந்த மோதல் காரணமாக மக்களுக்கு எந்த ஒரு விடயமும் கிடைக்கவில்லை.

தற்போது என்றாலும் ஐக்கிய தேசிய கட்சியில் பிளவுப்பட்டவர்கள் அரசு ஒன்றை அமைக்க வாக்கு கேட்கவில்லை. வரலாற்றில் முதல் முறையாக எதிர்க்கட்சி அரசு ஒன்றை அமைக்க வாக்கு கேட்காத முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அவர்கள் சிறிகொத்தவைக் கைப்பற்றவே வாக்கு கேட்கின்றார்கள். அது நீதிமன்றத்திற்கு சென்றாவது தீர்த்துக் கொள்ள முடியும். நாட்டை அமைக்க எங்களுடன் இணையுமாறு நான் எங்கள் இளைஞர் யுவதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார்.



# இரண்டாம் அலை அடித்தால் இலங்கை மீளெழ முடியாது

## எச்சரிக்கின்றார் ரணில்

கொழும்பு, ஜூலை 14

கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்படும் அச்சம் இலங்கையில் நிலவிவரும் இந்தக் காலத்தில், தேர்தல் ஆணைக்குழுவுடன் அரசு பேசி, பொதுத் தேர்தல் தொடர்பாக உரிய முடிவொன்றை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. எச்சரிக்கையான ஒரு காலத்தில்தான் இன்று வாழ்ந்து வருகிறோம்.

இதனை அரசு புரிந்து கொள்ளவேண்டும். கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்திலும் அரசு பொய்க்கூறிக் கொண்டுதான் இருக்கிறது.

எனவே, தேர்தல் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தி உடனடியாக இதற்கு ஒரு முடிவைக் காணுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏனெனில், தற்போது அனைத்துக் கட்சிகளும் பாரிய நிதியை செலவழித்துதான் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், திடீரென தேர்தலை பிற்போட்டால் அது பாதிப்பாக அமையும்.

எனவே, இப்போதே இது தொடர்பாக கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால், தேவையின்றிப் பணத்தை செலவழிக்க வேண்டியத் தேவையும் கட்சிகளுக்கு ஏற்படாது.

இரண்டாவது கொரோனா அலை ஏற்பட்டால் நிச்சய மாக இலங்கையால் மீள் எழும்ப முடியாது. இப்போதே இலங்கைக்கு 600 கோடி அமெரிக்க டொலர் தேவைப்படும் நிலையில், கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்டால் 1200 கோடி டொலராக அந்த நிதி அதிகரித்து விடும்.

இதனால், மக்கள் வரலாறு காணாத சுமையை அனுபவிப்பார்கள். இதனை கட்டுப்படுத்தும் வகையில்தான் நாம் செயற்பட வேண்டும் - என்றார்.

# ரயில் நிலையத்துக்கு பூட்டு

கொழும்பு, ஜூலை 14

உனவட்டுன ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

சுகாதார பிரவினரின் ஆலோசனைக்கு அமைவாக நேற்றுத் திங்கட்கிழமை அந்த ரயில் நிலையத்தை மூடத் தீர்மானித்ததாக அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் இருந்து ஹபராதுவ பகுதிக்குச் சென்ற நபரொருவருக்கு கொரோனா தொற்று உறுதியானது. அந்த நபருடன் உனவட்டுன ரயில் நிலைய அதிபர் தொடர்புகளை பேணியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, ரயில் நிலைய அதிபர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரை 14 நாட்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே உனவட்டுன ரயில் நிலையத்தை நேற்றுத் தற்காலிமாக மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அங்கொட லொக்காவின் சகா கைது!

பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினரான அங்கொட லொக்கா மற்றும் பெத்தியா கொட சங்க ஆகியோரின் உதவியாளர்கள் இருவர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

முல்லேரியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுமுல்ல பகுதியில் வைத்து இந்த நபர்கள் நேற்றுக் காலை 5 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இருவரில் 32 வயதுடைய விதானகமகே கயான் தர்ஷன என்பவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த நபர் 2019ஆம் ஆண்டு ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமேத எனும் மணல் வியாபாரி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சுகாதார நடைமுறைகள் மக்களால் புறக்கணிப்பு

## அனில் ஜாசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 14



பெரும்பாலான மக்கள் கொரோனா வைரஸைச் சாதாரண விடயமாக கருத ஆரம்பித்து விட்டனர். இதனால் முன்மொழியப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கூட பின்பற்றாமல் புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனரெனச் சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

நாட்டில் அமுல்படுத்தப் பட்டிருந்த பொது முடக்கம் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பாலான மக்கள், கொரோனா வைரஸ் தொற்றைச் சாதாரணமாக கருத ஆரம்பித்துவிட்டனர்.

இதன் காரணமாக சில நிறுவனங்கள் மற்றும் பெரும் பாலான மக்கள், அரசாங்கத்தினால் வலியுறுத்தப்பட்ட சுகாதார நடை முறைகளை பின்பற்றுவதை முற்றாக தவிர்த்து வருகின்றனர் - என்றார்.




செய்திகள்

# தியாகங்கள், வலிகளை மறந்து அமைச்சு பதவிகளை பெறோம்

## சுமந்திரனுக்கு கிழக்கு கூட்டமைப்பும் எதிர்ப்பு

அம்பாறை, ஜூலை 14

எமக்காக தியாகம் செய்தவர்களை விட்டுவிட்டு, வலிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை நாம் மறந்து விட்டு, நாம் அரசோடு ஒட்டிக் கொண்டு ஓடி ஒளிக்கலாமா? - இவ்வாறு காரைதீவில் இடம் பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் பொறியியலாளர் கலாநிதி செல்வராஜா கணேஸ் கேள்வி எழுப்பினார்.



கடந்த 30 வருட யுத்த சூழ்நிலையில் ஏறத்தாழ எமது விடுதலைப் போராட்டத்தில் 49 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் இந்த மண்ணிலே எமக்காக ஆகுதியாகினார்கள். 54 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தபுதாரர்களானார்கள். 99 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகள் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து மேற்பட்டோர் இது வரையும் காணாமலாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அம்பாறையில் ஆயிரத்து 416 பேர் காணாமல் ஆக்கப்பட்டு இருக்கிறார் கள். அவர்கள் தமிழ் மக்கள் இல்லையா? இவற்றுக்கெல்லாம் நாம் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வகை சொல்லாமல் மாற்று இடத்தில் போய் இருப்பது இவர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்தும். இந்த மக்களின் கண்ணீரை துடைப்பது யார் இதற்காகத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற வீட்டுச் சின்னத்தில் வந்து உங்கள் வாக்கை கேட்டு உங்கள் சக மனிதனாக இந்த சமுதாயத்தை வழிநடத்த கூடியவனாக உங்களிடத்தில் வந்திருக் கின்றோம்.

இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது என்றும் யார் காட்டிக் கொடுத்தார்கள் என்று உங்களுக்கு தெரியும். கர்ப்பத்தில் இருக்கும் பெண்ணின் வயிற்றில் கொல்லப்பட்ட குழந்தைகள், இறந்து கிடந்த தாயின் மார்பில் பால் குடித்த குழந்தைகளும் இன்றும் வலிகளை சுமந்து கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே இந்த குழந்தையின் வாழ்க்கைக்கு நாங்கள் என்ன சொல்ல வேண்டும்? அமைச் சுப் பதவிகளை பெற்று அரசாங்கத்தின் பின்னால் சென்றால் அந்த குழந்தையின் வலிக்கு நாங்கள் என்ன சொல்ல போகிறோம்? என சிந்திக்க வேண்டும் எமது மண்ணை கள்ளனும் காவாலியும் குடிகாரனும் ஆளவேண்டிய சூழ்நிலை வந்தால் அதன் பழியை எமது சமுதாயம் ஏற்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தளவில் உலகளாவிய ரீதியில் பல விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டு வருகின்றது. அதில் சிலவற்றை ஏற்றுக்கொள்ளவும் நாங்கள் கடமைப்பட்டிருக் கின்றோம். ஆனால், எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தளவில் நாம் யாரையும் கொலை செய்யவில்லை கப்பம் பெறவில்லை களவு செய்யவுமில்லை. இவ்வாறான காரியங்களில் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுபடவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது நோக்குவது எமது மண், நாங்கள் வாழ்ந்த மண் நமக்கு வேண்டும் - என்றார்.




# வாக்களிப்பு வீதம் அதிகரித்தால் மட்டக்களப்பில் 4 ஆசனங்கள்

## திட்டத்தை சொன்னார் சம்பந்தன்

மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பில் வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதன் மூலம் 4 ஆசனங்களை நிச்சயமாகப் பெற முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கத்தின் 3 நூல்கள் வெளியீட்டுவிழா, நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இந்நிகழ் வில் கலந்து கொண்டபின்னர் தமிழ் அரசுக் கட்சியின் அலு வலகத்துக்கும் அவர் சென்றார்.

அங்கு தேர்தல் குறித்து மந்திராலோச இடம்பெற்றது. இதன் பின்னர் நடந்த கூட்டத் தில், மட்டக்களப்பு மாவட்டத் தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதத்தை கடுமையாக அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

4 பிரதிநிதிகள் பெற வேண்டிய இந்த மாவட்டத்தில் மக்களின் வாக்களிப்பு வீதக் குறைவினால் 3 பிரதிநிதிகளை மாத்திரமே பெறக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலையை அனைவரும் ஒன்றிணைந்து மாற்ற வேண்டும்.

திருகோணமலையில் சுமார் 85 வீத்திற்கு மேல் மக்கள் வாக் களிக்கையில் மட்டக்களப்பில் அது வெகு குறைவாகவே இருக் கிறது. வாக்களிப்பு வீதத்தை அதிகரிப்பதுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கான வாக் களிப்பை அதிகரிக்கச் செய்யுமிடத்து 4 ஆசனம் கிடைப்ப தென்பது அவ்வளவு கடினமான காரியம் அல்ல என்று சுட்டிக் காட்டப்பட்டது.



# மட்டக்களப்பிலும் நேற்று தபால் மூல வாக்களிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 14

நாடு முழுவதும் நேற்று தபால் மூல வாக்களிப்பு இடம் பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச ஊழியர்கள் நேற்று ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பேணி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளி பேணப்பட்டு தபால் மூல வாக்களிப்பை வழங்கினர்.

மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உட்பட மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளிலும் வாக்களிப்புகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வாக்களிப்பை ஒட்டி பிரதேச செயலகங்களுக்கு பலத்த பாதுகாப்பு பொலிஸாரால் வழங்கப்பட்டது.

# சிறுபோக அறுவடை ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஜூலை 14

மட்டக்களப்பு மாவட்டத் தில் சிறுபோக வேளாண்மை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

கிரான், வாழைச்சேனை ஆகிய கமநல சேவைகள் அலுவலகத்திற்கு உட்பட்ட பெருவெட்டை, மூக்கர்ற கல், ஜப் பார்திடல், தரசேனை, வாகனேரி, வகுலாவலை உட்பட பல பகுதிகளிலும் சிறுபோக வேளாண்மை செய்கை அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வருட சிறுபோக வேளாண்மைச் செய்கையில் கூடுதல் நோய்தாக்கம் ஏற்பட்டு நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

# அரச ஊழியர்கள் சுயகௌரவத்துடன் கடமையாற்ற நடவடிக்கை எடுப்பேன்

## கருணா தந்திரப் பிரசாரம்



அம்பாறை, ஜூலை 14

சகல அரச உத்தியோகத்தர்களும் சுயகௌரவத்துடன் கடமையாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருணா என்றறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் அவர், தபால் மூல வாக்களிப்பை மையப் படுத்தி - அரச ஊழியர்களை ஈர்ப்பதற்காக இந்தப் பிரசாரத்தை அவர் மேற்கொண்டார்.

"அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட அலுவலர்களுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் முன்னெப் போதும் இல்லாதவாறு சகல அரச உத்தியோகத் தர்களும் சுயகௌரவத் துடன் கடமையாற்ற நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

அரச ஊழியர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நிலையில் அம்பாறை தமிழ் அரச ஊழியர்களுக்கு மிக முக்கியமான தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

வெற்றிபெற்று ஆட்சியமைக் கும் சந்தர்ப்பத்தில் சகல அரச நிலை உத்தியோகத்தர்களுக்கும் முன்னேப்போதும் இல்லாத வாறு சுயகௌரவம் வழங்கப் படும் என்பதில் ஐயம் இல்லை.

அரச சுற்றுநிருபங்கள் முறையாக செயற்படுத்தபட்டு உத்தியோகத்தர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். இதன் மூலம் அரச உத்தியோகத்தர்கள் பயமின்றி தமது பணியை மேற்கொள்ளலாம் - என்றும் அவர் கூறினார்.



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பெண் பூவே
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
ஜோதிகா மற்றும் ரேவதி நடிப்பில் ஜாக்பா




அருள்நிதி மற்றும் ஸ்ரதா ஸ்ரீநாத் நடிப்பில் K13
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : இப்படியும் பாடலாம்
5.00 மணி : ட்றெய்லர் டைம்
6.00 மணி : மூவி டோக்கீஸ்
**இரவு**
7.00 மணி : கொத்துப்பரோட்டா
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை




10.00 மணி : யாவரும் கேளீர்




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமீழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 10 - கணிதம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகக்கல்வி மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித அந்தோனியார் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2020 அன்று வெளியிடப்பட்டது.